# தி/தி/புனித மரியாள் கல்லூரி
## (தேசிய பாடசாலை)
## அலகுப் பரீட்சை-02 (7–12 அலகுகள்) - 2022
## கத்தோலிக்க திருமறை

**தரம் - 11** **நேரம் - 3.00 மணி**

**சுட்டெண் - ……………….**

**மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்க.**

1. ஐம்பதாம் நாள் என்பதைக் குறிக்கும் யூத திருவிழா
   1. பாஸ்கா 2. பெந்தக்கோஸ்தே 3. யோம் கிப்பூர் 4. சுக்கோத்

2. திருச்சபையில் நியமனம் பெற்ற முதல் பணியாளர்
   1. மூப்பர்கள் 2. திருத்தூதர் 3. திருத்தொண்டர் 4. குருக்கள்

3. திருச்சபையின் முகல் மறைசாட்சி
   1. ஸ்தேவான் 2. பிலிப்பு 3. யாக்கோபு 4. பேதுரு

4. புனித யாக்கோபுவின் மறைசாட்சி மரணத்திற்கு காரணமான அரசன்
   1. நீரோ 2. $1^{ம்}$ அக்கிரிப்பா 3. அந்திபாஸ் 4. பெரிய ஏரோது

5. A – புனித பவுல் B – புனித பேதுரு
   C – புனித ஸ்தேவான் D – புனித யாக்கோபு

மேல்வருவோரில் இயேசுவின் பன்னிரு சீடர்களில் அடங்குவோர்
   1. A, B 2. B,C 3. B, D 4. A,C

6. பிற இனத்தாரின் திருத்தூதர் என அழைக்கப்படுபவர்
   1. A 2. B 3. C 4. D

7. நீர் மெசியா வாழும் கடவுளின் மகன் என அறிக்கையிட்டவர்
   1. A 2. B 3. C 4. D

8. புனித பவுல் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தியதற்கான பிரதான காரணம்
   1. கிறிஸ்தவர்களின் மேல் கொண்ட பொறாமை
   2. யூத மதத்தின் மேல் கொண்ட தீவிர பற்றுதல்
   3. யூதர்களின் தூண்டுதல்
   4. கிறிஸ்தவர்களின் தவறான நடத்தை

9. புனித பவுலின் $2^{ம்}$ தூதுரைப் பயணத்தில் அவரோடு இணைந்து கொண்டவர்கள்
   1. தீத்து, ஆக்கில்லா 2. திமொத்தேயு, லூக்கா
   3. பர்னபா, யோவான் மாற்கு 4. யோவான் மாற்கு, தீத்து

10. பேதுரு என்பதன் பொருள்
    1. மீட்பு 2. பாறை 3. விடுதலை 4. திறவுகோல்

11. இன்று திருச்சபையின் கண்காணும் தலைவராக இருப்பவர்
    1. குருவானவர் 2. ஆயர் 3. கருதினால் 4. திருத்தந்தை

12. திருத்தந்தை முதலாம் பிரான்சிஸ் எந்த சபையில் குருத்துவப் பட்டம் பெற்றார்
    1. அமல மரித் தியாகிகள் 2. இயேசு சபை 3. பிரான்சிஸ்கன் சபை 4. கப்புச்சின் சபை

13. தற்போதைய திருத்தந்தை 2013ம் ஆண்டுக்கான ........................................ விருதைப் பெற்றார். இடைவெளிக்குப் பொருத்தமான சொல்
   1. கலை வித்தகர்   2. தேசாபிமானி   3. சிறந்த மனிதர்   4. ஒழுக்க சீலர்

14. திருச்சபையின் ஒருமைப்பாட்டிற்கு ஊற்றாகவும், முனமாதிரிகையாகவும் இருப்பது
   1. குடும்பம்   2. மூவொரு இறைவன்   3. பங்குச் சபை   4. மேய்ப்புப் பணி சபை

15. "தந்தையே நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பது போல அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக!" இவ் வசனம் காணப்படும் நற்செய்திப் பகுதி
   1. மத்:17 அதி   2. யோவா: 15 அதி   3. யோவா: 17 அதி   4. லூக் 15 அதி

16. கத்தோலிக்கம் என்ற பதம் குறித்து நிற்பது
   1. உலகளாவிய பொதுத்தன்மை   2. தலைமைத்துவப் பண்பு
   3. தனித்துவத் திருச்சபை   4. அருள் வாழ்வு

17. திருச்சபையின் பண்புகள் அறிக்கையிடப்படும் செபம்
   1. பரலோக மந்திரம்   2. மூவேளைச் செபம்   3. காலைச் செபம்   4. நம்பிக்கை அறிக்கை

18. போர்த்துக்கேயரின் வருகைக்கு முன் இலங்கையில் கிறிஸ்தவம் இருந்ததாகக் கூறும் நூல்களில் ஒன்று
   1. வியாகுல பிரசங்கம்   2. தேவ வேத புராணம்
   3. கிறிஸ்தவ சபைகளின் விபரணம்   4. பரிசுத்த ஏடுகள்

19. போர்த்துக்கேயரின் காலத்தில் இலங்கை வந்த முதல் துறவற சபை
   1. யேசு சபை   2. அகுஸ்தீனார் சபை   3. பிரான்சிஸ்கன் சபை   4. ஒறத்தோரியன் சபை

20. " எவரும் வாழ்நாள் முழுவதும் கவனியாது விட்ட எதனையும் அவரது மரண நேரத்தில் நிறைவேற்ற முடியாது" எனக் கூறியவர்.
   1. அருட்பணி யாக்கோமே கொன்சால்வேஸ்   2. அருட்பணி மைக்கல் றொட்றிகோ
   3. ஆயர் பொன்ஜின்   4. புனித யோசே வாஸ்

21. பெரிய குறிப்பிடம் என்னும் நூலை எழுதியவர்
   1. ஆயர் லியோ நாணயக்கார   2. ஆயர் எட்மன் பீரிஸ்
   3. அருட்பணி யாக்கோமே கொன்சால்வேஸ்   4. ஆயர் தியோகுப்பிள்ளை

22. அருளடையாளங்களின் அருளடையாளம் எனப்படுவது
   1. திருமுழுக்கு   2. ஒப்புரவு   3. உறுதிப்பூசுதல்   4. நற்கருணை

23. நற்கருணைப் புதுமை நடைபெற்ற லஞ்சியானோ நகரில் இரத்தம் பரிசோதிக்கப்பட்ட போது எவ்வகை குருதி என அடையாளம் காணப்பட்டது
   1. A   2. B   3. D   4. AB

24. பெரிய வியாழக்கிழமையன்று இயேசு ஏற்படுத்திய அருட்சாதனங்கள் எவை?
   1. திருமுழுக்கு, திவ்விய நற்கருணை   2. குருத்துவம், திருமணம்
   3. திவ்விய நற்கருணை, குருத்துவம்   4. உறுதிபூசுதல், குருத்துவம்

25. இஸ்ராயேலரின் பணிகளில் பிரதான இரு வகைகள்
   1. எரிபலி, தானியப் பலி   2. நல்லுறவுப்பலி, குற்றநீக்கப்பலி
   3. முழுமையான எரிபலி, பாவநிவாரணப் பலி   4. கல்வாரிப்பலி, நல்லுறவுப்பலி

26. பாதம் கழுவும் நிகழ்வை விபரிக்கும் நற்செய்தி
   1. புனித மத்தேயு   2. புனித மாற்கு   3. புனித லூக்கா   4. புனித யோவான்

27. இஸ்ராயேல் வழிபாடுகளில் முதலிடம் பெறுவது
   1. செபம்   2. நோன்பு   3. பலி   4. ஈகை

28. பழைய ஏற்பாட்டு பலிகள் முழுமை பெறுவது
   1. பாதம் கழுவும் சடங்குகளால்   2. கல்வாரிப் பலியினால்
   3. சிலுவைப் பாதையினால்   4. நற்கருணை வழிபாட்டினால்

29. எக்காலத்துக்குமுரியதாயும், அளவில்லாததும், நித்தியமானதாயும் விளங்கும் பலி
   1. கல்வாரிப் பலி   2. பாவநிவாரணப் பலி   3. நல்லுறவுப்பலி   4. எரிபலி

30. சாவான பாவத்திலிருக்கும் ஒருவர் நற்கருணை பெறமுன் செய்ய வேண்டியது
   1. மனத்துயர் வழிபாட்டில் ஈடுபடல்   2. ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறுதல்
   3. திருப்பலிக்கு முன் மனம் வருந்துதல்   4. உத்தம மனஸ்தாப செபத்தை செபித்தல்

31. யூத பாஸ்காவில் பயன்படுத்தப்படும் கசப்புக்கீரை குறிப்பது
   1. புதிய வாழ்வு   2. புதிய தலைமுறை   3. எகிப்தின் துன்பங்கள்   4. பாலைவனப் பயணம்

32. நற்செய்தியாளர்கள் நால்வரும் குறிப்பிடும் ஒரே அருங்குறி
   1. தண்ணீரை இரசமாக்கியது   2. இரத்தப்போக்குடைய பெண் குணமாதல்
   3. புயலை அடக்கியது   4. அப்பங்களைப் பலுகச் செய்தது

33. கிறிஸ்துவின் மறையுடல் என அழைக்கப்படுவது
   1. திருத்தந்தை   2. திருச்சபை   3. ஆயர்   4. இறைமக்கள்

34. போர்த்துக்கேயர் இலங்கை வந்த போது முதலில் கைப்பற்றிய இராட்சியம்
   1. கோட்டை   2. கண்டி   3. சீதாவாக்கை   4. யாழ்ப்பாணம்

35. " வாழ்வு தரும் உணவு நானே என்னிடம் வருபவர்களுக்கு பசியே இராது. என்னிடம் நம்பிக்கை கொண்டிருப்பவர்களுக்கு......................................... இராது".
   இடைவெளிக்குப் பொருத்தமான சொல்
   1. துன்பம்   2. வீழ்ச்சி   3. தாகம்   4. குறைவு

36. ஆங்கிலேயர் காலத்தில் இலங்கை வந்த துறவற சபை அல்லாதது
   1. யேசு சபை   2. பிரான்சிஸ்கன் சபை   3. நல்லாயன் சபை   4. ஒறற்றோரியன் சபை

37. யோசே வாஸ் அடிகளாருக்கு புனிதர் பட்டம் கொடுத்தவர்
   1. புனித 2ம் அருள் சின்னப்பர்   2. திருத்தந்தை சிக்ரஸ்
   3. திருத்தந்தை 15ம் பெனடிக்ற்   4. திருத்தந்தை 1ம் பிரான்சிஸ்

38. புனித பவுல் வீட்டுக்காவலில் இருந்து நற்செய்தி அறிவித்த இடம்
   1. தமாஸ்கு   2. அந்தியோக்கியா   3. எபேசு   4. உரோமை

39. புனித பவுல் தனது மூன்று பயணங்களையும் ஆரம்பித்த இடம்
   1. எருசலேம்   2. சீரிய அந்தியோக்கியா   3. பிலிப்பி   4. துரோவா

40. புனித யோசே வாஸ் அடிகளார் இறைபதம் அடைந்த ஆண்டு
   1. 1651   2. 1687   3. 1696   4. 1711

**சுருக்கமான விடை தருக**

1. பெந்தக்கோஸ்தே நிகழ்வில் இடம் பெற்ற இரு நிகழ்வுகளைக் குறிப்பிடுக.

2. பேதுருவின் அருளுரையின் சாராம்சங்கள் இரண்டு தருக.

3. திருச்சபையில் முதல் மறைசாட்சியும், திருத்தூதர்களில் முதல் மறைசாட்சியும் யாவர்?

4. திருத்தொண்டர்கள் தெரிவு செய்யப்பட்டமைக்கான காரணங்கள் இரண்டு தருக.

5. புனித பவுலின் கோத்திரம் எது? அவர் யாரிடம் கல்வி கற்றார்?

6. புனித பவுலின் பிறப்பிடம், அவர் உயிர்த்த இயேசுவைசட சந்தித்த இடம் என்பனவற்றை முறையே குறிப்பிடுக.

7. புனித பவுலின் முதலாவது பயணத் தோழர்கள் யாவர்?

8. புனித பவுல் யாருடைய கலாபனையில் எப்போது மறைசாட்சியானார்?

9. சகோதரர்களாயிருந்த திருத்தூதர்கள் யாவர்?

10. மோட்சத்தின் திறவுகோல் யாரிடம் ஒப்படைக்கப்பட்டது?

**விரும்பிய நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

**(01)**
அ) பேதுருவின் நம்பிக்கை அறிக்கை எது?
ஆ) தற்போதைய திருத்தந்தை வகித்த பதவிகள் எவை?
இ) திருத்தந்தை பிரான்சிஸிடம் காணக்கூடிய நற்பண்புகள் 5ஐ குறிப்பிடுக.

**(02)**
(அ) திருச்சபையின் பண்புகள் எவை?
(ஆ) கத்தோலிக்கம் என்னும் சொல்லின் இரு பண்புகளும் எவை?
(இ) திருச்சபையின் ஒருமைப்பாட்டை வளர்க்க கிறிஸ்தவ மாணவனாகிய நீர் செய்யக்கூடிய செயல்கள் 5 எழுதுக.

**(03)**
(அ) போர்த்துக்கேயர் இலங்கை வந்த ஆண்டு யாது?
(ஆ) போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருமுன் இலங்கையில் கிறிஸ்தவம் இருந்தமைக்கான சான்றுகள் 2 தருக.
(இ) ஒல்லாந்தர் காலத்தில் கத்தோலிக்கர்கள் எதிர்கொண்ட சவால்கள் 5 தருக.

**(04)**
(அ) புனித யோசே வாஸ் பிறந்த ஆண்டு, மாதம், திகதி என்பனவற்றைக் குறிப்பிடுக.
(ஆ) அவரால் இலங்கையில் ஆற்றப்பட்ட புதுமைகள் மூன்று தருக.
(இ) புனித யோசே வாஸ் அடிகளாரின் வாழ்வு எமது வாழ்விற்கு எவ்வாறு முன்மாதிரியாய் உள்ளது என்பதை விளக்குக.

**(05)** விரும்பிய இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

(அ) அருட்பணி யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளார்

(ஆ) நற்கருணையின் சிறப்பியல்புகள்

(இ) பழைய ஏற்பாட்டில் பாஸ்கா